DEPOSITION OF WITNESS
(Chapter XXIII of Code of Criminal Procedure)
IN THE COURT OF SESSIONS JUDGE OF THE NILGIRIS
AT UDHAGAMANDALAM

| | | |
|---|---|---|
| **Sessions .. ..** | **:** | **S.C.No. 17 of 2020** |
| **Deposition of witness for** | **:** | **PW- 7** |
| **Name** | **:** | மருதாச்சலம் |
| **Father's/Husband Name** | **:** | |
| **Age** | **:** | |
| **Address** | **:** | |
| **Village** | **:** | |
| **Calling** | **:** | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873**

**13.8.2025**

**முதல் விசாரணை :**

நான் கொலக்கம்பையில் குடியிருக்கிறேன், கூலி வேலை செய்கிறேன். இவ்வழக்கில் இறந்துபோன பழனிசாமியை தெரியும். நீதிமன்றத்தில் ஆஜராகியிருக்கும் 1ஆம் எதிரி மகாதேவன், 2ஆம் எதிரி நவீன்குமார் மற்றும் 3ஆம் எதிரி ரமேஷ் ஆகியோரை தெரியும். பழனிசாமி எதனால் இறந்துபோனார் என்பது தெரியாது. போலிசார் எங்கள் ஊருக்கு வந்தார்கள், ஆனால் அப்போது நான் போலிசார் கேட்டு கையொப்பம் எதுவும் போடவில்லை, அன்று சாயந்தரம் ஊர்காரர்களை போலிசார் காவல் நிலையத்திற்கு வரச்சொன்னார்கள், நானும் போயிருந்தேன், ஊர்காரர்கள் 2 பேர்

கையொப்பம் போடுங்கள் என்று சொன்னார்கள், நானும், என் தங்கை கணவர் லோகநாதனும் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் போட்டோம். என் தங்கை கணவர் லோகநாதன் இறந்துவிட்டார், ஆனால் அவருடைய கையொப்பம் எனக்கு தெரியாது. என்னிடம் காண்பிக்கப்படும் 22.1.2020ஆம் தேதி 12.30 மணிக்கு தயார் செய்யப்பட்ட பார்வை மகசரில் இருக்கும் 2வது கையொப்பம் என்னுடையதுதான், அந்த கையொப்பம் மட்டும் Exhibit P6 ஆகும். என் கையொப்பம் உள்ள Exhibit P6 ஆவணத்தில் என்ன எழுதப்பட்டிருக்கிறது என்பது எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரி நீதிமன்றம் அனுமதித்ததன் பேரில் அரசு தரப்பு குறுக்கு விசாரணை:**

என்னை போலிசார் விசாரித்தார்கள் என்றும், நான் போலிசார் விசாரணையில் 22.1.2020ஆம் தேதி எங்கள் ஊர் விநாயகர் கோவில் அருகே நானும், என் தங்கை கணவர் லோகநாதனும் நின்று பேசிக்கொண்டிருந்தோம் என்றும், அப்போது வெளிங்டன் காவல் ஆய்வாளர் வந்து பழனிசாமியிடம் எதிரிகள் தகறாறு செய்த இடத்தை பார்வையிட்டு என் முன்னிலையிலும், லோகநாதன் முன்னிலையிலும் அன்று 12.30 மணிக்கு ஒரு பார்வை மகசரும், வரைபடமும் தயாரித்தார் என்றும், அதில் நானும், லோகநாதனும் சாட்சி கையொப்பம் போட்டோம் என்றும், பின்னர் அந்த

ஆய்வாளர் கேட்டதன் பேரில் நானும், லோகநாதனும் ஆய்வாளரோடு சென்றபோது ஊட்டி to கோத்தகிரி ரோட்டில் உள்ள பேராறு பஸ் நிறுத்தத்தில் வைத்து ஆய்வாளர் 1ஆம் எதிரி மகாதேவனையும், 3ஆம் எதிரி ரமேசையும் எங்கள் முன்னிலையில் கைது செய்தார் என்றும், அப்போது எங்கள் முன்னிலையில் 1ஆம் எதிரி மகாதேவன் தானாக முன்வந்து ஆய்வாளரிடம் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார், அதை ஆய்வாளர் பதிவு செய்தார் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும், லோகநாதனும் சாட்சி கையொப்பம் போட்டோம் என்று சொல்லிவிட்டு தற்போது எதிரிகளை காப்பாற்றுவதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால், சரியில்லை.

**1,2 மற்றும் 3ஆம் எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**:

இல்லை.

N. MURALIDHARAN

Digitally signed by N. MURALIDHARAN
Date: 2025.08.13 13:22:51 +0530